S.C. No: 264/2019
பெயர்: விஜயகுமார்
**அ.சா. 18**
09/10/2023
(எதிரிகள் 1, 3 முதல் 6 வரை ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)
**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உதவி ஆய்வாளர் அலுவலகமும் என்னுடைய அலுவலகமும் ஒரே கட்டிடத்தில் தான் உள்ளது என்றால் சரி. நான் இந்த வழக்கின் விசாரணைக்கு வழக்கு கோப்பினை 06/06/2019 ஆம் தேதி காலை 6.30 மணிக்கு வழக்கின் விசாரணைக்காக வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்டேன். அ.சா.1 கொடுத்த புகாரின் அசலை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நகலை தான் பார்த்தேன். அசலை பார்க்கவில்லை. குற்ற பத்திரிக்கையில் கண்டுள்ள சாட்சிகளை தவிர வேறு யாரையும் விசாரித்தேனா என்றால் இல்லை. பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடயதல்ல என்றால் என் கையெழுத்து தான். பார்வை மகஜர் கணினி அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. கணினியில் டைப் செய்தது யார் என்று நினைவில்லை. என்னுடன் வந்தவர். யாரால் டைப் அடிக்கப்பட்டது என்று தெரியாது. மாதிரி வரைபடத்தில் உள்ள எழுத்துக்கள் என்னால் எழுதபட்டவை அல்ல என்றால் சரி. ஒப்புதல் வாக்குமூலம் யாரால் டைப் அடிக்கப்பட்டது என்ற விவரமும், அவரது கையெழுத்தும் இல்லை என்றால் சரி. பிரேத விசாரணை அறிக்கையும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அதுவும் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும், அவரது கையொப்பமும் இல்லை என்றால் சரி. தடயப்பொருள்கள் நீதிமன்றத்தில் 26/03/2021 இல் தான் கிடைக்கப்பெற்றுள்ளது என்றால் சரி. கைப்பற்றுதல் மகஜரும் கணினியில் டைப் செய்யப்பட்டது. யாரால் டைப் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரி. கைப்பற்றுதல் மகஜர், படிவம் 95ம் பாபநாசம் நீதிமன்றத்தில் 07/06/2019 இல் கிடைக்கப்பெற்றுள்ளது என்றால் சரி. மருத்துவமனையில் அ.சா.1 யை நான் விசாரித்த போது அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இருந்ததா என்றால் வெளிக்காயம் எதுவும் இல்லை.

என் விசாரணையில் காயம்பட்ட நபர் இறந்த சமயத்தில் குடிபோதையில் இருந்தார் என்று தெரிய வந்ததா என்றால் இல்லை. பகுப்பாய்வாளர் காயத்திரியை நான் விசாரித்து பெற்ற அறிக்கையில் அவர் உடல் உள்ளுறுப்புகள் மற்றும் ரத்தத்தில் ஆல்கஹால் கலந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். பகுப்பாயவு அறிக்கைக்கு எதிராக இறந்து போனவர் காயம்பட்ட சமயத்தில் குடி போதையில் இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போனவர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு சம்பவத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்பு இருதய அறுவை சிகிச்சை செய்திருக்கிறார் என்றால் என் விசாரணையில் தெரியவரவில்லை. இறந்து போனவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரி. நான் விசாரித்த 1 முதல் 29 சாட்சிகளின் வாக்குமூலங்களும் பாபநாசம் நீதிமன்றத்திற்கு 26/09/2019 அன்று தான் கிடைக்க பெற்றுள்ளது என்றால் சரி. அ.சா.1 கோபிநாத் என் விசாரணையில், தன்னை எதிரிகள் அனைவரும் கட்டையால் அடித்ததாக சொல்லவில்லை என்றால் நான்கு பேர் குமார், தனபால், ஜெயசங்கர், சந்தோஷ் ஆகியோர் அடித்ததாக சொல்லியுள்ளார். மற்ற எதிரிகள் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரி. கணனுற்ற சாட்சிகளை விசாரித்த பிறகு தான் எதிரிகளை கைது செய்த போது தடயத்தை கைப்பற்றினேன். தடயப்பொருட்களை காட்டி கண்ணுற்ற சாட்சிகளிடம் இந்த தடயப்பொருள்கள் தான் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதா என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் விசாரணை செய்த போது கண்ணுற்ற சாட்சிகள் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை தங்களால் அடையளாம் காட்ட முடியும் என்று சொன்னார்களா என்றால் சொன்னார்கள். ஆனால் வாக்குமூலத்தில் இல்லை. அவ்வாறு சாட்சிகள் சொல்லவில்லை என்றாலும், சொல்லியிருந்தால் நான் வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.2 தனிக்காசலம் என் விசாரணையில் உமாபதி, ராதாகிருஷ்ணன், சசிக்குமார் ஆகியோர் அவரையும், அவரது தம்பியையும்

உருட்டு கட்டையால் அடித்ததாக என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் கையால் அடித்ததாக சொல்லியுள்ளார். உருட்டு கட்டையால் அடித்ததாக சொல்லவில்லை. தாக்கிய போது பயன்படுத்தப்பட்ட உருட்டு கட்டையை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்று வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரி. அ.சா.3 பிரவீன் குமார் என் விசாரணையில் கட்டைகளை காட்டினால் அடையாளம் காட்ட முடியும் என்று என் விசாரணையில் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரி. அ.சா.4 மாலதியை நான் முதலில் விசாரித்த போது, ராதாகிருஷ்ணன், உமாபதி, சசிக்குமார் ஆகியோர் தனிக்காசலத்தையும், கோபிநாத்தையும் கட்டையால் அடித்ததாக சொல்லவில்லை என்றால் கையால் அடித்ததாக சொல்லியுள்ளார். கட்டையால் அடித்ததாக சொல்லவில்லை. மேலும் என் விசாரணையில் நந்தகோபால் சேற்றில் குப்புற விழுந்துகிடந்தார் என்றும், வாய், மூக்கு, கண் ஆகிய இடங்களில் சேறாக இருந்தது என்றும், மூச்சு இழுத்துக்கொண்டிருந்தது என்றும் என் விசாரணையில் மாலதி சொன்னாரா என்றால் சரி. அடிப்பட்டு மயங்கி இருந்தார் என்று மட்டும் தான் சொல்லியுள்ளார். கோபிநாத்திற்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து இந்த குச்சியால் தாக்கினால் இந்த காயங்கள் ஏற்படுமா என்று விசாரித்தேனா என்றால் இல்லை. மருத்துவர் செந்தில் குமாரிடமும் தடய்பொருளை காட்டி விசாரித்தேனா என்றால் இல்லை. தடயப்பொருள்களை கைப்பற்றியதாக சொல்லப்படும் முற்புதரின் நீளம் அகலம் நான் கைப்பற்றுதல் மகஜரில் சொல்லப்படவில்லை என்றால் சரி. முட்புதரில் எந்த பகுதியில் இருந்து ஆயுதங்கள் எடுக்கப்பட்டது என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை தான் கைப்பற்றினேன். காண்பிக்கப்படும் கட்டை வெயிட்டே இல்லாத கட்டை என்றால் சுமாரான வெயிட் உள்ள கட்டை. கட்டைகள் அனைத்தும் புதியதாக உள்ளது என்றால் சரியல்ல. தடயப்பொருள்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் நான் சொன்ன நாள் நேரத்தில் இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் எதிரி என்னிடம் எந்த ஒரு ஒப்புதல்

வாக்குமூலமும் கொடுக்கவில்லை. அதன் தொடர்ச்சியாக நான் எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கே போகாமல் சாட்சிகள் யாரையும் சம்பவயிடத்தில் வைத்து விசாரிக்காமல் வழக்கின் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வேறு நபரால் தயாரிக்கப்பட்டதை நான் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கையெழுத்து போடும் போதும் நான் படித்து பார்த்து அதை புரிந்து கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நந்தகோபால் இறந்ததற்கும் எதிரிகளுக்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/
ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.